சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே



நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com

சனிக்கிழமை 17.12.2022 supeedsam.com supeedsam@gmail.com


# புலிகளின் வேலைத்திட்டத்தை சுமந்திரனும் சாணக்கியனும் முன்னெடுக்கின்றனர்

## சுவிட்ஸர்லாந்து தூதரகத்திற்கு முன்பாக போராட்டம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா. சாணயக்கியனுக்கு எதிராக சுவிட்ஸர்லாந்து தூதரகத்திற்கு முன்பாக போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் அதிகாரப் பகிர்வின் ஊடாக அதிகாரப் பரவலாக்கல் எனும் தொணிப்பொருளின் தெற்கில் வேலைத்திட்

02 ஆம் பக்கத்தில்...

## கடத்தப்பட்ட பிரபல தமிழ் வர்த்தகர் உயிரிழப்பு

CID விசாரணை



ஜனசக்தி குழுமத்தின் தலைவரும் பிரபல வர்த்தகருமான தினேஷ் ஷாப்டர் கடத்தப்பட்டு, கடுமையாக தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸாரும், குற்றப் புலனாய்வு பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் சில விசேட பொலிஸ் குழுக்களும் அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடத்தப்பட்டு, கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் காருக்குள் இருந்து மீட்கப்பட்ட தினேஷ் ஷாப்டர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையில் நேற்றிரவு உயிரிழந்தார்.

இவர் தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் பொதுச்செயலாளர் சந்திரா ஷாப்டரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாங்கள் தேர்தலுக்கு ரேடி !

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வசம் உள்ள உள்ளூராட்சி தலைவர்கள் குழு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து உரிய நேரத்தில் உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராக இருப்பதாக தெரிவித்ததாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

தேர்தல் காலத்தில் எரிபொருள் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததாக அவர்களுடன் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தலைவர்கள் தேர்தலுக்குத் தயாராக இருப்பதாகவும் ஆனால்

02 ஆம் பக்கத்தில்...

## நாளொன்றுக்கு ஏழு அல்லது எட்டு மணிநேரம் மின்வெட்டு?



எதிர்காலத்தில் நாளொன்றுக்கு ஏழு அல்லது எட்டு மணி நேரம் மின்வெட்டு ஏற்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் இந்த நிலை ஏற்படக் கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## திடீரென கைவிரித்த ரணில்: வடக்கு கிழக்கில் இப்படி ஒரு நிலையா?

வடக்கு கிழக்கு மாகாணம் உள்ளிட்ட கொழும்பு, ஊவா ஆகிய நான்கு மாகாணங்களில் தொடர்ந்து வீதி அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க முடியவில்லை.

இவ்வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சில வீதிகளை போக்குவரத்து மேற்கொள்வதற்கு ஏற்றது போல அபிவிருத்திக்கு மேற்கொள்ளவதாகவும் ஐரோட் திட்டப்பணிகள் சிலவற்றை முடிவிற்கு கொண்டு வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஆசிய அபிவிருத்தியின் கடன் நிதியானது சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் ஏற்படுத்தும் உடன்பாடு உறுதியாக கிடைக்கும் வரை அந் நிதி மூலம் நடைபெற்ற ஐரோட் திட்ட வீதி புனரமைப்புப்பணிகள் சிலவற்றை இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சில வீதிகள் போக்குவரத்துக்கு ஏற்றவகையில் மாத்திரம் சீரமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.



இத்திட்டத்தை மீளவும் ஆரம்பிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெறவுள்ள உடன்படிக்கை பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி மீள வழங்க உடன்பாடு காலத்தை பொறுத்துத் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி!

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

பகுதி இரண்டின் வினாப்பத்திரமே முதலில் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் பகுதி ஒன்று

02 ஆம் பக்கத்தில்...

## ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பளாராக எஸ்.எம் மரிக்கார் நியமனம்!



ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பளாராக எஸ்.எம் மரிக்கார் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் பதவிக்கான நியமனக்கடித்தை எஸ்.எம் மரிக்காரிடம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று (வெள்ளிக்கிழமை) கையளித்தார்.

கட்சியின் ஊடகப் பேச்சாளராகவும், உதவி செயலாளராகவும் எஸ்.எம் மரிக்கார் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## கூட்டணி தொடர்பில் 15 கட்சிகளுடன் மொட்டு கட்சி பேச்சு!



பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஈடுபட்டுள்ளது என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி மட்டுமல்ல கூட்டணி சம்பந்தமாக 15 கட்சிகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் பரந்தப்பட்ட கூட்டணி அமையும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல புதிய அமைச்சரவையும் விரைவில் நியமிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302



Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma 34598 25605: cicero

MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# 5 ஏக்கரில் இராணுவத்தினரின் விவசாய செய்கை அறுவடைகள் மட்டு. அரச அதிபரிடம் கையளிப்பு!

மட்டக்களப்பில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த சேதன விவசாய அறுவடைகள் இராணுவத்தின் 231ஆம் படைப் பிரிவின் பிரிகேடியர் திலுப பண்டாரவின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் ஒருங்கிணைந்த பண்ணையின் பொறுப்பதிகாரி மேஜர் நிமால் பத்மசிறியினால் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனிடம் (வியாழக்கிழமை) மாலை கையளிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் இராணுவத்தின்



11 எஸ்.ஆர் சிங்க படைப் பிரிவினால் விவசாயப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரையம்பதி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கர்பலா கிராமத்தில், நான்கரை ஏக்கர் பற்றைக் காடுகளாக இருந்த அரச காணியினை இராணுவத்தினர் பொறுப்பேற்று ,ஒருங்கிணைந்த சேதன விவசாயப் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இங்கு கௌபி, பயறு, கச்சான் போன்ற தானியங்களுடன் மரவள்ளி, பயற்றை, புடோல், பாகல், சுரக்காய், போன்ற மரக்கறி வகைகள் பயிரிடப்பட்டு, மக்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிகழ்வில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் சத்தியாநந்தி, மட்டக்களப்பு மாவட்ட விவசாய பணிப்பாளர் ஆர்.ஹரிகரன், கால்நடை அபிவிருத்தித் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் உதயராணி குகேந்திரன், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஜி. பேரின்பராசா, லெப்டினன் கேர்னல் தம்மிக ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிறுபான்மை மக்களின் தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு!

சிறுபான்மை மக்களின் தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக, பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியில்,

பெரும்பாலும் பொருளாதார நெருக்கடிகள் அரசியல் நெருக்கடிகளுக்கு வழிவகுக்கும். இங்குள்ள சிறுபான்மை சமூகங்களில் இருந்து உங்களுக்கு எவ்வாறான ஆதரவு கிடைக்கிறது?

எதிர்காலத்திலும் இதேபோன்ற ஆதரவை அனுபவிப்பீர்கள் என்று நினைக்கிறீர்களா என வினவியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஸ் குணவர்தன,

இலங்கையும் இந்தியாவும் உலகின் மிகப் பழமையான ஜனநாயக நாடுகளாக உள்ளன.

அங்கு மக்கள் அரசாங்கங்களைத் தேர்ந்தெடுப்பதுடன், பதவி நீக்கவும் செய்துள்ளனர். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையேயான உறவு அப்படியே உள்ளது.

மேலும், ஒவ்வொரு அரசாங்கமும் அனைத்து குடிமக்களுக்கும், அவர்களின் வாழ்க்கை, பாதுகாப்பு, அத்துடன் பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி போன்றவற்றில் சாத்தியமான அனைத்து வாய்ப்புகளையும் வழங்கியுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின்முன், அனைவரும் சமம். தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் எவரும் சவால் விடலாம்.

ஆகவே, கடந்த சில மாதங்களில் நிலவிய ஜனநாயக அமைதியின்மைக்கு பதிலளிப்பதில் இப்போது அதிக நம்பிக்கை உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

அவர்கள் யாராக இருந்தாலும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மக்கள் மத்தியில் எங்கள் நம்பிக்கையை முழுமையாக மீட்டெடுத்துள்ளோம்.

எங்கள் குடிமக்கள் அனைவரும் பிரார்த்தனை செய்த எங்கள் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமையை எங்களால் மீண்டும் கொண்டு வர முடிந்தது.

அரசாங்கத்தின் மீது அளப்பரிய நம்பிக்கை உள்ளதுடன், நாட்டின் வடகிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சிகளுடனும், எதிர்க்கட்சிக்குள் இருக்கும் அரசியல் குழுக்களுடனும் நாங்கள் இணைந்து செயற்படுகின்றோம். எவருக்கும் பாரபட்சம் கிடையாது.

வடக்கு மக்களோ அல்லது தமிழ் பேசும் மக்களோ அல்லது முஸ்லிம் மக்களோ என அனைவரும் முன்வைத்த வேறு சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, தீர்க்கப்படாத புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக, பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

# மரம் விழுந்து தோட்ட குடியிருப்புகள் சேதம்





**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

தலவாக்கலை ஒலிரூட் மேற்பிரிவு தோட்டத்தில் பழமை வாய்ந்த மரம் ஒன்றினை தோட்ட நிர்வாகமும் பொது மக்களும் இணைந்து வெட்ட முற்பட்டபோது அம்மரம் உடைந்து தோட்ட குடியிருப்புகளின் மீது விழுந்ததில் மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். குறித்த தோட்டத்தில் தோட்ட குடியிருப்புகள் மீது பழமை வாய்ந்த மரம் ஒன்று உடைந்து விழும் அபாயம் தோன்றியதால் தோட்ட நிர்வாகமும், தோட்டத் தொழிலாளர்களும் அந்த மரத்தை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுத்திருந்தனர். அதற்கிணங்க நேற்று முன் தினம் மாலை குறித்த மரத்தை வெட்டிக்கொண்டிருந்தபோது குறித் மரம் உடைந்து தோட்ட குடியிருப்புகள் மீது விழுந்துள்ளது. குறித்த மரம் வெட்டும் போது தோட்ட குடியிருப்புகளில் இருந்த மக்கள் வெளியேற்றப்பட்டமையால் எவருக்கும் உயிர் ஆபத்து ஏதும் ஏற்படவில்லை, ஆனால் குடியிருப்புகள் மற்றும் அதிலிருந்த சொத்துக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. அக்குடியிருப்புகளில் வசித்து வந்த நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் இடம்பெயர்ந்து தற்போது அத்தோட்ட வாசிகசாலை மண்டபத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். சேதமடைந்த அனைத்தும் தோட்ட குடியிருப்புகளும் தோட்ட நிர்வாகத்தின் செலவில் புனரமைக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என தோட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறந்த ஊடகவியலாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது பெற்றார் ஊடகவியலாளர் சக்திவேல்



**(வ.சக்திவேல்)**

இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம், இலங்கை பத்திரிகை பேரவையுடன் இணைந்து நடத்திய 2021 ஆம் ஆண்டுக்கான அதி சிறந்த ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் வைபவம் கொழும்பு கல்கிஸ்ஸ மௌண்ட்லாவின்யா ஹோட்டலில் செவ்வாய்கிழமை (13.12.2022) அன்று மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது.

இதில் சிறந்த ஊடகவியலாளருக்கான மக்களின் பிரச்சனைகளை கட்டுரைகள் வடிவில் வெளிக்கொணர்ந்தமைக்காக மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் அவர்கள் சுப்பிரமணியம் செட்டியார் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அவரது ஊடக வளர்ச்சிக்கும், எழுத்தாற்றலுக்கும் தொடர்ந்தும், ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும், மேற்கொண்டுவரும், பத்திரிகை ஆசிரியர்கள், சிரேஸ்ட்ட ஊடகவியலாளர்கள், குடும்பதினர், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், சக ஊடக நண்பர்கள் உள்ளிட்ட பலரும், வழங்கிய ஒத்துழைப்பே அவரது வளர்ச்சிக்கும், இவ்விருது பெறுவதற்கும் காணரமாக அமைந்ததாகவும், அணைவருக்கும் மிகக் கௌரவமான நன்றிகளையும், தெரிவித்துக் கொள்வதாக இதன்போது விருது பெற்ற ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் தெரிவித்தார்.

சமூக சேவை செயற்பாட்டாளரான ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் அவர்கள் இதற்கு முன்னரும், பிராதேச மட்டம் முதல் தேசியமட்டம் வரையில் பலவிருதுகளைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இது இலங்கையின் ஊடகவியல் துறையை மேம்படுத்தும் நோக்கில் சிறந்த ஊடகவியலாளர்களைத் தெரிவு செய்து கௌரவிக்கும் நிகழ்வு இம்முறை 23 வது தடவையாகவும் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பில் இடம்பெற்ற 'மாணவர் தூதுவர் தேசிய வேலைத்திட்டம்' தோடர்பான செயலமர்வு!

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)மட்டக்களப்பு**

தேசிய சிறுவர் பாதுகாப்ப அதிகார சபையினால் தலைமைத்துவ பயிற்சியை வழங்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்

''மாணவர் தூதுவர் தேசிய வேலைத்திட்டம் '' தொடர்பான கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மாணவர்களுக்கான செயலமர்வு அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட உத்தியோகத்தர் நிஷா ஹரீமின் ஏற்பாட்டில் இடம்பெற்ற செயலமர்விற்கு கிழக்கு மாகாண ஆளுணர் அனுராதா ஜகம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதிப்பணிப்பாளர் லக்சிகா மணிக்வோவ (தகவல் மற்றும் ஊடகப்பிரிவு), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் திட்டமிடல் பணிப்பாளர் சாணி காமலர்கொட, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஊடக அதிகாரி தனுஸ்க சேனாரத்ன, மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஆ.நவேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி,

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இச் செயலமர்வின்போது சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு,

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சேவைகளை பெற்றுக்கொள்ளல், மாணவ தலைவர்கள் எவ்வாறாக தமக்கான தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக்கொள்வது, நிலைபேறான தலைமைத்துவம், நிலைபேறான முகாமைத்துவம், சிறுவர் பாதுகாப்பு தினத்தினை பிரகடனப்படுத்தல் மற்றும் பாடசாலைகளின் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான குழு செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

நாட்டில் 9 மாகாணங்களிலும் இத்திட்டமானது நடைமுறைப்படுத்தவுள்ளதுடன், தேசிய ரீதியில் மாணவர் தூதுவர் தேசிய மாநாடு நடாத்தப்படவுள்ளமை,

ஜனாதிபதி ஆசிரியர் தூதுவர் விருது மற்றும் ஜனாதிபதி மாணவர் தூதுவர் விருது வழங்கப்படவுள்ளமை தொடர்பாகவும் இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இச்செயலமர்வில் மட்டக்களப்பு, அம்பாரை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவ தலைவர்கள், அதிபர்கள், பொறுப்பாசிரியர்களும், திருகோணமலை மாவட்டத்தில் இருந்து அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள் உள்ளிட்ட கல்வி திணைக்கள அதிகாரிகள், பொலிசார் மற்றும் துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள் என மேலும் பலர் கலந்து கொண்டனர்.










## புலிகளின் வேலைத்திட்டத்தை சுமந்திரனும்...

டமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

சமஷ்டி தொடர்பாக தெற்கில் நிலவிவரும் பிழையான கண்ணோட்டத்தை இல்லாது செய்து, தமிழ் மக்களின் இனப் பிரச்சினை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக தெளிவுப்படுத்தும் வகையிலேயே இந்த வேலைத்திட்டம் அமைந்திருந்தது.

இதன் ஓர் அங்கமாக அண்மையில் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுவிட்ஸர்லாந்து தூதுவரையும் சந்தித்து, கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிலையில், இந்த செயற்பாடுகளுக்கு எதிர்ப்பினை வெளியிடும் வகையிலேயே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

சிங்கள இராவய மற்றும் அப்பே ஜனதா பக்ஷய எனும் கட்சியினராலேயே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த போராட்டக்காரர்கள், சுமந்திரன் மற்றும் சாணக்கியன் எடுக்கும் இந்த முயற்சிக்கு சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் ஒத்துழைக்கக்கூடாது என்றும் சமஷ்டி முறையிலான தீர்வுக்கு நாட்டில் இடமில்லை என்றும் தூதுரகத்திற்கு தெரிவித்துள்ளனர்.

மேலும், அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டுள்ள இந்தியாவே இன்னும் வளர்ச்சியடையாத நாடாகத்தான் காணப்படுவதாகவும் போராட்டக்காரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு, வடக்கு- கிழக்கில் இராணுவக்குறைப்புக்காக சுமந்திரன்- சாணக்கியன் போன்றோர் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் இவர்கள் இதன்போது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இவ்வாறான செயற்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டமென்றும் தெரிவித்துள்ளனர்.

## நாங்கள் தேர்தலுக்கு...

தேர்தல் காலங்களில் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுமானால் அது அவர்களின் தேர்தல் எதிர்பார்ப்புகளுக்கு இடையூறாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் உள்ளூராட்சி அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் நலன் மற்றும் சமூகத் திட்டங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குமாறும் அவர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த சந்திப்பில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புரவும் கலந்துகொண்டார் என அறிய முடிகிறது.

## புலமைப்பரிசில் பரீட்சைக்கான...

வினாப்பத்திரமே முதலில் வழங்கப்பட்டது.

பகுதி ஒன்று வினாப்பத்திரம் என்பது நுண்ணறிவு வினாக்களை கொண்டதாகும்.

பகுதி ஒன்று வினாப்பத்திரம் கடினமானது என்பதால் பாட விடயதானங்கள் அடங்கிய பகுதி இரண்டின் வினாப்பத்திரத்தை முதலில் வழங்குமாறு பெற்றோர்களால் கோரப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரவித்துள்ளார்.



# ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்த நினைக்கும் ஜனாதிபதி ரணில்

ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்,
மட்டக்களப்பு.

ஜனாதிபதி ரணில் பழுத்த அரசியல்வாதி யாவார்.ஆனால், மக்கள் மத்தியில் அவரது ராஜதந்திரங்கள் பெரிதாக விளங்குவதில்லை. இதனால்தான் 2020 பாராளுமன்றத் தேர்தலில் அவரது ஐக்கிய தேசியக்கட்சி பூச்சிய நிலைக்குச் சென்றது. அதனோடு ரணில் அவர்களின் அரசியல் சரித்திரம் பூச்சியமாகிவிட்டது என்றுதான் கணிசமானவர்கள் நினைத்தார்கள். ஆனால் பூச்சியத்தில் இருந்தும் இராச்சியத்தின் தலைவர் ஆகலாம் என்பதை ரணில் நிரூபித்து விட்டார்.தற்போது அவர் தேசிய இனப்பிரச்சினையை %5 ஆவது சுதந்திர தினதிற்கு முன்பாகத் தீர்த்து விடப்போவது போல் பேசிவருகின்றார்.ஆனால், அது சாத்தியமற்றது என்பதை தமிழ் தலைவர்கள் நன்கு அறிவார்கள்.ஜனாதிபதி ரணில் அவர்கள் 45 வருட கால பாராளுமன்ற அனுபவசாலி என்பதுடன் பல்வகைப் பதவிகளை வகித்தவர. தற்போது சாத்தியமற்றது என்று நினைத்த ஜனாதிபதிப் பதவியையும் தனதாக்கியுள்ளார். இந்த நிலையில் இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பான பேச்சுவார்த்தை என்ற ஒரு கல்லின் மூலமாக பல மாங்காய்களை விழுத்த நினைக்கிறார். எது எப்படியாக இருந்தாலும் தமிழ்த் தேசியக்கட்சிகள் அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டியது அவசியமாகவுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அவரது அலுவலக மக்கள் சந்திப்பின் போது கருத்துரைத்தார்.

அவ்வாறு கலந்து கொள்ளாது விட்டால்,தான் நியாயமான அடிப்படையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்ட போதும் தமிழித்தலைமைகள் ஒத்துழைக்கவில்லை என்றும், அவர்கள் இனப்பிரச்சினைய அப்படியே வைத்துக் கொண்டு அரசியல் செய்ய விரும்புகின்றார்கள் என்றும் குற்றச்சாட்டை உருவாக்கி சர்வதேசத்திற்கு ஜனாதிபதி சொல்லுவார்.இதனைத் தமிழ்த்தேசியத் தலைவர்கள் அறிவார்கள்.எனவே,தமிழ்த் தலைவர்கள் இப்பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும்,ஆனால் காலத்தை நீடிக்க விடக்கூடாது என்பது கணிசமான தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

அது அவ்வாறு இருக்க, ஜனாதிபதி ரணில் பேச்சு வார்த்தை என்ற தந்திரக்கல் மூலமாக விழுத்த நினைக்கும் மாங்காய்கள் எவை எனப் பார்ப்போம்.சர்வதேசத்தின் பார்வையில்,ஜனாதிபதி தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் சாதகமாகச் செயற்படுகின்றார் என்ற விம்பம் ரணிலுக்கு ஏற்படும்.அதேவேளை சரவதேச மத்தியஸ்த பொறிமுறையில் இருந்து தப்பிக்ககொள்ள ஜனாதிபதி நினைக்கிறார்.ஆனால் பேச்சு வார்த்தையின் அடுத்துத்த கட்டத்திலாவது சர்வதேசத்தலையீடு அவசியமானதாகும்.குறிப்பாக இந்தியாவின் தலையீட்டைத் தவிர்க்க முடியாது.அமரிக்கா,கனடா போன்ற நாடுகளது தலையீடுகளும் அவசியமானது.

சாதாரண தமிழ் மக்களின் பார்வையில்,ரணில் இனப்பிரச்சினையைத் தீர்கக விரும்புகின்றார்,அவர் ராஜபக்சக்களை விட பறவாயில்லை,இனவாதம் அற்றவர் அல்லது குறைந்தவர் என்ற எண்ணம் ஏற்படலாம். மொட்டுக்கட்சியினர் பார்வையில் தமக்கு ஏற்பட்ட அதிகார நெருக்கடியில் இருந்தும்,நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்தும் மீள்வதற்கு இந்த நாடகத்தைக் குறித்த காலம் நடாத்த வேண்டும்,பின்னர் சிங்களவர்களின் காவலர்களாகக் காட்டி இதனைக்குழப்ப ரணில் வழிவகுப்பார் என்றும் கருத வாய்ப்புள்ளது.

தமிழ்த்தேசியக் கட்சிகள் பார்வையில் பேச்சுவார்த்தையை புறக்கணித்தால் தாம் தீர்வுக்கு எதிரானவர்கள் என்ற பெயரை ரணில் ஏற்படுத்தி விடுவார் என நினக்க இடமுண்டு.எனவே,தம்பக்கமாக அடிக்கப்பட்ட பேச்சு வார்த்தை என்ற பந்தினை கவனமாகக்கையாள வேண்டிய நிலைப்பாட்டில் தமிழ்த்தரப்பினர் உள்ளனர்,ஜனாதிபதி பார்வையில் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்பாத சமஷ்டித் தீர்வை வழங்க முடியாது அவர்களது கருத்தினையும் உள்ளடக்கிய குறைந்த பட்சமான தீர்வையே தர முடியும் என்ற நிலையில் உள்ளார். மேலும் கிழக்கு முஸ்லிம் தலைவர்களையும், கூடவே சந்திரகாந்தன் [பிள்ளையான்], கிழக்குச் சிங்களத் தலைவர்கள் போன்றவர்களை பயன்படுத்தி வடக்கோடு கிழக்கை இணைக்கும் கோரிக்கையை நிராகரிக்க முடியும் என்ற நிலைப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு. மேலும் ஐக்கிய தேசியத் கட்சியினர் பார்வையில் ரணில் எப்படியாவது,அவரது இப்படியான தந்திரோபாயங்கள் மூலமாக தமது கட்சிக்கு மீண்டும் செற்கை சுவாசம் அளித்து உயிர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கின்றனர்,மேலும் சஜித் தலைமையிலான ஐக்கிம்மக்கள் சக்தியினரின் ஒற்றையாட்சி சிந்தனையானது ராஜபக்சக்களின் சிந்தனைத்தளத்திற்கு ஒப்பானது என்பதை வெளிக்காட்ட ஜனாதிபதி விரும்புகின்றார்.

இப்படியாக ஒரு கல்லில் பல மாங்காய களை விழுத்த ஜனாதிபதி ரணில் நினைக்கின்றார்.கடந்த %4 ஆண்டுகளாக சிங்களத் தலைவர்கள் கையாண்ட அபதந்திரங்கள் யாவும் நாட்டுக்கும் மக்களுக்கும் அந்தரநிலையையே ஏற்படுத்தியுள்ளது.அபதந்திரம் தனக்கந்திரம் என்பதை இந்த நாட்டை ஆட்சி செய்த சிங்களத தலைவர்கள் விளங்காமல் இருப்பதுதான் விந்தையாகவுள்ளது.

அந்த அபதந்திரந்தான் இந்த் நாட்டின் சமூக பொருளாதார அரசியல் அனைத்தையும் அதள பாதாழத்திற்குத் தள்ளியுள்ளது.இந்த நாட்டில் மூன்று விடயங்கள் நாட்டை வெகுவாகப் பாதித்துள்ளன.பேரின மேலாதிக்க அடிப்படைவாதம்,தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமை,ஊழல் மோசடிகள் இந்த விடயங்களுக்கு நிலையான நியாயமான தீர்வு காணப்படாதவரை இந்த நாட்டையும் மக்களையும் எத்தலைவர்களாலும் மீட்கமுடியாது. இவற்றைத் தீர்ப்பதற்கு தலைவர்களுக்கு இதயசுத்தி இருக்க வேண்டும்,மாறாக இதய சொத்தியான தலைவர்களால் நாட்டை அழிக்கவே முடியம்,ஆக்க முடியாது என்பதே கடந்த 74 வருடகால தரித்திரமான சரித்திரமாகும். அந்த தரித்திர சரித்திரத்தில் இருந்து விடுபட பேரின அடிப்படைவாதம் அனுமதிக்காது. அதனைக்கடக்க முடியாத தலைவர்களேஇலங்கையை இதுவரை ஆட்சி செய்துள்ளார்கள்.ஜனாதிபதி ரணிலுக்கு பேரினவாதத்தை கடக்கக்கூடிய ஆளுமை ஆற்றல் உண்டா? என்பதுதான் எமது கேள்வியாகும்.மொட்டுக்கட்டுப்பாட்டில் ரணில் உள்ளவரை அது அவரால் முடியாது.மொட்டுக்கட்டுப்பாட்டை உடைப்பதாக இருந்தால் இரண்டரை வருட காலத்தின் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடாத்த முடியும்.அதற்கான வாய்ப்பு எதிர்வரும் 2023 மார்ச் மாதத்தில் உண்டு.பொது மக்களதும்,எதிர்க்கட்சிகளதும் அழுத்தம் அதிகரித்தால் அது சாத்தியமாகும்.

## சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறையினர் பெருமையுடன் வழங்கிய "துறைமுகத்தின் நிழல்கள் - வாத்திய இசைச் சங்கமம்"











கிழக்கு பல்கலைக்கழகம், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இசைத்துறையினர் பெருமையுடன் வழங்கிய ??துறைமுகத்தின் நிழல்கள் -

இசை வாத்திய சங்கமம்?? நிகழ்வு மிகப் பிரமாண்டமாக இடம்பெற்றது. சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இராஜதுரை அரங்கில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்ஷன் கலந்து சிறப்பித்ததுடன், குறித்த நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தங்கராசா மலர்ச்செல்வன், பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளனர்.

அதிதிகளுக்கு மலர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் இறை பிரார்த்தனை கீதம் இசைக்கப்பட்டு ஆரம்பமாகிய நிகழ்வில், இசைத்துறை விரிவுரையாளர் திருமதி.கிருபாஞ்சனா கேதீஸ் அவர்களினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதனைத் தொடர்ந்து, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளரின் தலைமையுரையும், இசைத்துறை தலைவரின் நிகழ்வு தொடர்பான அறிமுகவுரையும் இடம்பெற்றது.

இரண்டு பகுதிகளாக இடம்பெற்ற

இசைக்கருவிகளின் சங்கம நிகழ்வில் மகா கணபதிம் பாடல், கர்நாடக இசைக்குறிப்புகள், தெலுங்கு மொழி கிருதி, சமஸ்கிருத மொழி பக்திப்பாடல், மேலைத்தேய ஸ்வத குறிப்புகள், கர்நாடக இசையை தழுவி அமைந்த அமுதே தமிழே திரையிசைப்பாடல் மற்றும் கன்னட மொழிப்பாடல் என்பன பல்வகை வாத்திய கருவிகளினால் இசைக்கப்பட்டு அனைவரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தனர்.



இந்நிகழ்வின்போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி. சரண்யா சுதர்ஷன் மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் தங்கராசா மலர்ச்செல்வன் ஆகிய இருவரின் சேவையைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இறுதியாக பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகளின் விசேட உரையினைத் தொடர்ந்து பார்வையாளர்கள்கருத்தும், அதனைத் தொடர்ந்து நிகழ்வின் ஒருங்கிணைப்பாளரும் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின்விரிவுரையாளருமான பிறிசில்லா ஜோர்ஜ் அவர்களின் நன்றியுரையுடன் ?குடச்ஞீணிதீ ணிஹு ஞுடஹு கணிஞுணுஞு? இசை வாத்திய சங்கமம் நிகழ்வு நிறைவுற்றது

இந்நிகழ்வில் இசைத்துறைத் தலைவர் கலாநிதி.நிர்மலேஸ்வரி பிரசாந்த், நடன நாடகத்துறை தலைவர் கலாநிதி.தாட்சாயினி பரமதேவன், கட்புல தொழில்நுட்பத்துறை தலைவர்கலாநிதி.சீவரெத்தினம், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பிரதிப்பதிவாளர், பிரதி நிதியாளர், சிரேஸ்ட உதவிப்பதிவாளர், சிரேஸ்ட உதவி நூலகர், உள்ளக கணக்காய்வாளர், சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் இணைப்பாளர்கள், சிரேஸ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## மனித உரிமை தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் சிறப்பு நிகழ்வு..!







(அ . அச்சுதன்)

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு அது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலை - செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது. சர்வதேச மனித உரிமை தினத்தையொட்டி இளைஞர்களுக்கிடையே போதைவஷ்து பாவனையை ஒழித்து ஆரோக்கியமிக்க எதிர்கால சமூதாயத்தை உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இந்நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மனித உரிமையை வழியுறுத்திய பேரணியொன்று விழா மண்டபத்தை வந்தடைந்து நிகழ்வுகள் ஆரம்பமானது.

இதில் மனித உரிமை ,பெண்கள் உரிமை தொர்பான விழிப்புணர்வு கண்காட்சி மற்றும் நடனம், நாடகம், உள்ளிட்ட நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு நிகழ்வுகளில் பங்குபற்றியோருக்கான பரிசில்கள் ,சான்றிதழ்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டன.

இதனை அகம் மனிதாபிமான வள நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் அதிதிகளாக மனித உரிமை ஆணைக்குழுவின் திருகோணமலை மட்டக்களப்பு திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸதீன், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பீ.தனேஸ்வரன், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.கனி, உப்புவெளி பிரதேச சபையின் உதவித் தவிசாளர் ,அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூவினங்களையும் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்குபற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது



# இன நல்லிணக்கமும் சமய படிப்பினைகளும்!



திருகோணமலை மாவட்டமானது திருகோணமலை, மூதூர் மற்றும் சேருவில ஆகிய மூன்று தேர்தல் பிரிவுகளையும் 11 பிரதேச செயலகங்களையும் கொண்டு அமைந்துள்ளது. திருகோணமலை தன்னகத்தே அழகிய ஒரு இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டது. பிரெட்ரிக் கோட்டையின் உயரமான குன்றானது 360 அடி (110 M) உயரம் கொண்டது. அதன் உச்சியில் எல்லோராலும் மிகவும் மதிக்கப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரம் கோவில் அமைந்துள்ளது. பௌத்தர்களின் புனித இடங்களில் ஒன்றான சேருவில விகாரை மற்றும் வில்கம் விகாரை என்பன திருகோணமலையில் அமைந்துள்ளது.

கரிமலையூத்தில் உள்ள முஸ்லிம் மசூதி, கத்தோலிக்கர் மற்றும் ஏனைய கிறிஸ்தவ சபையினருக்கான ஆலயங்கள் அனைத்தும் இந்த மாவட்டத்தில் நிலவுகின்ற மத நல்லிணக்கத்தைக் காட்டுகின்றது.

இந்த மத நல்லிணக்கத்திற்கும் இன நல்லிணக்கத்திற்கும் திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனம் திருகோணமலை மாவட்டத்தில் பல சிறப்பான வேலைத் திட்டங்களை நிறுவனத்தின் மாவட்ட பணிப்பாளர் அருட்தந்தை டன்ஸ்டன் பெட்ரிக் ஜோசப் அடிகளார் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன நல்லிணக்கத்தின் அடித்தளமாக திருகோணமலை எகெட் - கரித்தாஸ் நிறுவனத்தினால் சர்வமத குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இக் குழு மாவட்டத்தின் பிரதான ஒரு முக்கிய சக்தியாக காணப்படுகின்றது. இக்குழுவில் மதகுருமார்கள், சர்வமத தலைவர்கள் மற்றும் பொது நிலையினர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். சமய சகவாழ்வைக் கட்டியெழுப்புதல், சமாதானத்தை ஏற்படுத்துதல் என்ற கருப்பொருளின் அடிப்படையில் திருகோணமலையில் பல்வேறு செயற்பாடுகளை இவர்கள் முன்னெடுத்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இந்த சர்வமத குழு மாதாந்த கலந்துரையாடல்களை நடாத்தி திருகோணமலையில் நிலையான இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு ஒவ்வொரு மதத்தினரது பண்டிகைகள், விழாக்கள் என்பவற்றில் கலந்து சிறப்பித்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இனங்களிடையே பிரச்சனைகள் ஏற்படும்போது எவ்வாறு பிரச்சனைகள் மேலும் ஏற்படாமல் எவ்வாறு தீர்வு காண்பது என்பவற்றை ஆராய்ந்து சிறப்பான தீர்வுகளை எட்டியுள்ளனர் உண்மையிலேயே திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனத்தினர். இந்த சர்வமத குழுவின் மூலம் திருகோணமலையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் சர்வமத கலாச்சாரங்களின் ஊடாக நிரந்தரமான தீர்வுகளை எட்டுவதற்கும் இவர்கள் பாடுபட்டு வருகின்றனர்.



சமய படிப்பினைகளுக்கு இணங்க மனித மாண்பினை எவ்வாறு பாதுகாத்தல் என்ற விடயத்தை பார்க்கின்றபோது இந்து மதம், பௌத்த மதம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் மதம் என்ற அனைத்து மதங்களின் அடிப்படையில் மனிதனுக்கு உரிய கடமைகளையும், பொறுப்புகளையும், சமத்துவத்தையும், நீதியையும் எடுத்து கூறுகின்றன.

இந்து மதம் அடிப்படையில் பல சிறப்புக்களை கொண்டு உள்ளது. ஆதியான ஒருவர் இல்லை என இந்து மதப் படிப்பினைகள் தெரிவிக்கின்றன. அத்தோடு இந்து மதத்திற்கு ஆதியோ, அந்தமோ இல்லை. இம்மதம் சதா காலமும் வழிபடும் ஒரு மதமாக நிலைத்திருக்கிறது. இந்த மதத்தின் நம்பிக்கை ஒரே சக்தியை அடிப்படையாக கொண்டாதாகும். அச்சக்தி எந்த சொரூபமாக இருப்பினும் இருப்பது ஒரே சக்தியாகும்.

புரிந்து கொள்ளல், அதனை அமுல்படுத்தல் மற்றும் பங்கேற்றல் என்பன தொடர்பில் இந்து மதத்தின் நம்பிக்கை தங்கியுள்ளது.

பௌத்த சமய படிப்பினைகளுக்குள் சமுதாயம் நிலைத்திருப்பதற்கு தேவையான பழக்கவழக்கம் மற்றும் நன்னடத்தை பழக்க வழக்கங்கள் மற்றும் நன்னடத்தை தொடர்பான முன்னுரிமைப் படுத்தப்பட்ட சில படிப்பினைகள் பௌத்த மத!படிப்பினைகளுக்குள் அடையாளம் காணப்பட்டது.

பௌத்த மதமானது இவ்வுலகின் சுகபோக வாழ்க்கை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தவில்லை மாறாக விண்ணுலக வாழ்வினதும் அவதார பிறப்புக்களினதும் நலனுக்காக இவ்வுலக வாழ்வினை சிறப்பிக்கத் தேவையான அடிப்படைக் காரணிகளையும் எடுத்துரைக்கின்றது.

கிறிஸ்தவ சமயம் விவிலியம், அன்பு, சமாதானம், விடுதலை வாழ்க்கை மற்றும் பாதுகாப்பு பற்றி சிறப்பாக எடுத்துரைக்கப்படுகின்றது.

இவ்வுலகத்தில் அனைத்து மனிதர்களும் இறைவனுடைய சாயலாகவே படைக்கப்பட்டனர்.(ஆதியாகமம் 1/26, சங்கீதம் 8/5) அத்தோடு மனிதர்களில் இவ்வுலகின் பிறப்பையும் இறைவனுடைய சாயலையும் முழு உலகிற்கும் எடுத்துக் காட்டுகிறது எனவே இறைவன் படைத்த அனைத்து படைப்புக்களிலும் மனிதன் மேலோங்கி நிற்பதோடு அவனுக்கென விசேட விதமான மாண்பு வழங்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் என்ற பதமானது சாந்தி மற்றும் சமாதானம் ஆகும் எனவே இஸ்லாம் மதத்தின் அடிப்படை இஸ்லாம் எனும் வார்த்தைக்கிணங்க ஒழுகுவதாகும். ஒரு குழந்தையின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான காலப்பகுதியில் அக்குழந்தை பழகி வாழும் சமுதாயம் எவ்வாறானதாக இருப்பினும் அச்சமுதாயத்தில் வாழவேண்டிய கோட்பாடுகள் மற்றம் படிப்பினைகள் வகுத்தெடுக்கப்பட்டுள்ளது.

எனவே மத நல்லிணக்கத்திற்கும் இன நல்லிணக்கத்திற்கும் அடிப்படையாக அமைவது ஒவ்வொரு மதங்களைப் பற்றிய அறிவு அனைவருக்கும் இருக்கவேண்டும் இச்செயற்பாட்டை திருகோணமலை எகெட்-கரித்தாஸ் நிறுவனம் சர்வமத குழு மூலம் ஏற்படத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ . அச்சுதன்)





# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**24547 | வே | 1983**
காங்கேசன்துறை | இந்து
BD | Gas Technician
பரணி (மேடம்)
180 செ.மீ | சு.செவ்: 09

**23563 | வே | 1993**
உரும்பிராய் | இந்து | BD
Digital Automation
திருவோணம் (மகரம்)
171 செ.மீ | செவ்: 02

**24091 | வே | 1992**
திருநெல்வேலி | இந்து
BSc | Engineer
பூராடம் (தனுசு)
162 செ.மீ

**23470 | வே | 1990**
பருத்தித்துறை | இந்து | BSc
Quantity Surveyor
கேட்டை (விருச்சிகம்)
152 செ.மீ | Oman

**25391 | வே | 1988**
சிறுபிட்டி | இந்து | UK
A/L | Business
பூசம் (கடகம்)
173 செ.மீ | செவ்: 04

**24505 | வே | 1986**
மண்கும்பாண் | இந்து | Swiss
Diploma | Medicine Stock officer | ஆயிலியம் (கடகம்)
175 செ.மீ ;செவ்

**25413 | வே | 1983**
நீர்வேலி | இந்து | BSc
IT Designer | France
உத்தரம் (கன்னி)
164 செ.மீ

**23941 | வே | 1993**
பருத்தித்துறை | இந்து | BD
Civil Engineer
ரேவதி (மீனம்)
179 செ.மீ | செவ்: 01

**23410 | வே | 1992**
கொக்குவில் | இந்து | BSc
Registered Nurse
அனுஷம் (விருச்சிகம்) | USA
172 செ.மீ

**23662 | வே | 1991**
மிருசுவில் | RC | Aus
MBA | Jr.Network Engineer | 157 செ.மீ

**23974 | கு | 1989**
உடுத்துறை | Non RC | UK
MSc | Software Engineer
அனுஷம் (விருச்சிகம்)
172 செ.மீ | சு.செவ்: 07

**23419 | வே | 1986**
கைதடி | இந்து | B.Tech
Quality Controller
திருவாதிரை (மிதுனம்)
178 செ.மீ | செவ்: 12

**25398 | வே | 1984**
உடுவில் | இந்து | USA
MSc | Business
சித்திரை (துலாம்)
செ.மீ | செவ்: 07

**24430 | வே | 1995**
உரும்பிராய் | இந்து
B.Eng | Software Engineer
உத்தரட்டாதி (மீனம்)
178 செ.மீ | செவ்: 08

**24493 | வே | 1993**
அளவெட்டி | இந்து | BSc
Sr.Software Engineer
ரேவதி (மீனம்)
179 செ.மீ | செவ்: 02

**23305 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | MSc
Researcher | Norway
பூரம் (சிம்மம்)
178 செ.மீ | சு.செவ்: 05

**24472 | வே | 1990**
கரணவாய் | இந்து | BD
Soft. Engineer | Singapore
உத்தரட்டாதி (மீனம்) | சைவம்
170 செ.மீ | செவ்: 01

**24334 | கரை | 1987**
முல்லைத்தீவு | இந்து | BBA
Audit Officer
மகம் (சிம்மம்)
175 செ.மீ | சு.செவ்: 05

**23500 | வே | 1986**
திருநெல்வேலி | இந்து | BSc
Quantity Surveyor
மிருகசீரிடம் (மிதுனம்)
188 செ.மீ

**25432 | வே | 1994**
மாவிட்டபுரம் | இந்து
PG Diploma | Accountant
ரேவதி (மீனம்)
185 செ.மீ

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**24742 | வே | 1986**
புங்குடுதீவு | இந்து | BD
Relief Support Worker
சதயம் (கும்பம்)
162 செ.மீ | Canada

**23965 | வே | 1996**
மானிப்பாய் | இந்து | BSc
Business Analyst
சுவாதி (துலாம்)
149 செ.மீ | சு.செவ்: 07

**23782 | வே | 1996**
உரும்பிராய் | இந்து | BD
Safety Coordinator
அஸ்வினி (மேடம்)
156 செ.மீ | Canada

**24322 | கோ | 1995**
சுருவில் | இந்து
BA | HR Executive
பூசம் (கடகம்)
158 செ.மீ | செவ்: 07

**23326 | வே | 1994**
உரும்பிராய் | இந்து
BSc | Lecturer
மூலம் (தனுசு)
163 செ.மீ

**24538 | வே | 1993**
கரவெட்டி | இந்து | UK
MSc | Clinical Pharmacist
மகம் (சிம்மம்)
170 செ.மீ | செவ்: 12

**23668 | வே | 1988**
திருகோணமலை | இந்து
A/L | Tesco Manager
உத்தரம் (கன்னி) | UK
168 செ.மீ | செவ்: 07

**23653 | வே | 1991**
நல்லூர் | இந்து
MBBS | Medical Doctor
அத்தம் (கன்னி) | Norway
154 செ.மீ | சு.செவ்: 06

**25417 | வே | 1999**
யாழ்ப்பாணம் | இந்து | BA
Fund Administrator
உத்தரட்டாதி (மீனம்)
169 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**23638 | வே | 1993**
கொழும்பு | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (மீனம்)
171 செ.மீ | சு.செவ்: 10

**23887 | வே | 1993**
கொக்குவில் | இந்து | MBA
Sr.Business Analyst
திருவாதிரை (மிதுனம்)
155 செ.மீ

**24529 | வே | 1993**
நல்லூர் | இந்து | MD
PhD Candidate
ரோகிணி (ரிஷபம்)
167 செ.மீ | Canada

**24064 | வே | 1992**
கைதடி | இந்து
MBA | Financial Analyst
அஸ்வினி (மேடம்)
156 செ.மீ | சு.செவ்: 05

**25397 | சோ.வே | 1996**
கொழும்பு | இந்து | BSc
Internal Auditor
ஆயிலியம் (கடகம்)
164 செ.மீ | சு.செவ்: 03

**24427 | வே | 1995**
வேலணை | இந்து | MSc
BSc | Accountant
ரேவதி (மீனம்)
158 செ.மீ | செவ்: 07

**24508 | கோ | 1995**
கரணவாய் | இந்து | MD
Engineer | Canada
மிருகசீரிடம் (ரிஷபம்)
170 செ.மீ

**23527 | வே | 1994**
நெடுந்தீவு | இந்து | Swiss
Medical Student (Final year) | அத்தம் (கன்னி)
168 செ.மீ

**25199 | கோ | 1993**
மானிப்பாய் | இந்து | MSc
Sr.Scientist | UK
பரணி (மேடம்)
170 செ.மீ | செவ்: 08

**24076 | வே | 2000**
ஏழாலை | இந்து | CIMA
Content & Social Media Associate | பரணி (மேடம்)
150 செ.மீ | சைவம்

077 716 4524 | www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**24112 | வே | 1991**
புலோலி | இந்து | BD
Civil Engineer | சூ.செவ்: 07
மிருகசீரிடம் (மிதுனம்)
186 செ.மீ | அவுஸ்ரேலியா

**24094 | ந | 1985**
சாவகச்சேரி | இந்து | A/L
Supervisor | அவுஸ்ரேலியா
உத்தரம் (கன்னி) | செவ்: 08
170 செ.மீ

**24091 | வே | 1992**
திருநெல்வேலி | இந்து | BSC
Engineer | சிங்கப்பூர்
பூராடம் (தனுசு)
162 செ.மீ

**17030 | கோ | 1989**
உடுவில் | இந்து | BD, MD
Shop Manager | லண்டன்
அஸ்வினி (மேடம்)
179 செ.மீ

**17063 | வே | 1991**
வடலியடைப்பு | இந்து | BSC,
CIMA | Accountant
பூரட்டாதி (கும்பம்)
170 செ.மீ | சூ.செவ் : 08

**17060 | வே | 1987**
நல்லூர் | இந்து
BD | Engineer
அனுஷம் (விருச்சிகம்)
180 செ.மீ

**17183 | வே | 1991**
கொக்குவில் | இந்து | BBM,
MBA | JR. Executive
ஆய்யிலியம் (கடகம்)
172 செ.மீ | சூ.செவ்: 09

**17288 | வே | 1988**
இணுவில் | இந்து | BD
Bio Medical Engineer
கேட்டை (விருச்சிகம்)
174 செ.மீ

**17315 | வே | 1980**
கொக்குவில் | இந்து
BD | Deputy Manager
மகம் (சிம்மம்)
173 செ.மீ

**17324 | கு | 1992**
பொலிகண்டி | இந்து | Aero
Space Eng. with Pilot Studies
Engineer | கார்த்திகை (மேடம்)
செவ் : 08 | 167 செ.மீ | லண்டன்

**17435 | வே | 1985**
வேலணை | இந்து | IAB
Business | லண்டன்
அத்தம் (கன்னி) | சூ.செவ்: 04
168 செ.மீ

**17555 | வே | 1991**
சண்டிலிப்பாய் | இந்து | BSC,
CCNA & CCNP | Engineer
மூலம் (தனுசு) | சூ.செவ்: 06
183 செ.மீ

**17576 | வே | 1989**
சுழிபுரம் | இந்து | MBBS
Doctor | செவ் : 07
பூராடம் (தனுசு)
185 செ.மீ

**17609 | கோ | 1992**
சுன்னாகம் | இந்து
Doctor | MBBS
மகம் (சிம்மம்)
182 செ.மீ | செவ் : 07

**17612 | வே | 1991**
கரவெட்டி | இந்து | அமெரிக்கா
A/L | Assistant Manager
கேட்டை (விருச்சிகம்)
174 செ.மீ | சூ.செவ் : 05

**17627 | வே | 1993**
உடுப்பிட்டி | இந்து | BSC
Engineer | சிங்கப்பூர்
பூசம் (கடகம்)
174 செ.மீ

**17651 | வே | 1989**
சுதுமலை | இந்து | BSC
Sr. Software Engineer
உத்தரம் (கன்னி)
174 செ.மீ | USA

**17654 | வே | 1992**
திருநெல்வேலி | இந்து | BD,
Doctorate Degree
Engineer | நியூசிலாந்து
புனர்பூசம் (கடகம்) | 167 செ.மீ

**17669 | கோ | 1990**
புத்தூர் | இந்து | A/L
Business | பிரான்ஸ்
புனர்பூசம் (மிதுனம்) | செவ்: 01
180 செ.மீ

**17672 | வே | 1990**
வண்ணார்பண்ணை | இந்து
|MSC | Project Engineer
Cum Manager | பரணி
(மேடம்) | 171 செ.மீ

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**24076 | வே | 2000**
ஏளாலை | இந்து | CIMA
Content & Social Media
Associate | பரணி (மேடம்)
150 செ.மீ

**24067 | வே | 1995**
மல்லாகம் | இந்து | BBA,
MAAT | Accounts, Audit,
Tax Consultant | செவ்: 12
அவிட்டம் (மகரம்) | 180 செ.மீ

**24064 | வே | 1992**
கைதடி | இந்து | BD, MBA
Financial Analyst
அஸ்வினி (மேடம்)
156 செ.மீ | சூ.செவ்: 05

**24031 | வே | 1998**
கரவெட்டி | இந்து | Reading
NVQ | Studying
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**24028 | வே | 1991**
இணுவில் | இந்து | A/L
Accounts Assistant
விசாகம் (விருச்சிகம்)
155 செ.மீ

**24025 | வே | 1996**
வவுனியா | இந்து | BA
Waiting for Graduate Trainee
திருவாதிரை (மிதுனம்)
153 செ.மீ | சூ.செவ்: 01

**24016 | வே | 1990**
உரும்பிராய் |இந்து| Diploma
Pharmacy Technician
ரோகிணி (ரிஷபம்) | செவ்: 04
166 செ.மீ | கனடா | Divorced

**24019 | வே | 1997**
நெல்லியடி | இந்து | Reading
NVQ | Customer Service
Executive | புனர்பூசம் (கடகம்)
160 செ.மீ

**17144 | வே | 1991**
காரைநகர் | இந்து
MBBS | Doctor
பூரட்டாதி (கும்பம்)
156 செ.மீ

**17192 | வே | 1984**
காரைநகர் | இந்து | PQHRM
Assistant Manager
பூசம் (கடகம்)
158 செ.மீ

**17198 | கு | 1982**
யாழ் நகர் | இந்து | BSC,
MSC, AIB | Bank Officer
கேட்டை (விருச்சிகம்)
163 செ.மீ | செவ் : 07

**17258 | வே | 1993**
மானிப்பாய் | இந்து
MSC | Architect
பூராடம் (தனுசு)
167 செ.மீ

**17336 | வே | 1990**
வட்டுக்கோட்டை | இந்து | BBA,
Reading MSC | Assistant
Register | சித்திரை (துலாம்)
163 செ.மீ | செவ்: 04

**17360 | வே | 1995**
சண்டிலிப்பாய் | இந்து
BSC | HR Executive
பூரம் (சிம்மம்) | செவ்: 02
168 செ.மீ

**17414 | வே | 1990**
யாழ் நகர் | இந்து
MBBS | Doctor
அவிட்டம் (மகரம்) | செவ்: 07
159 செ.மீ

**17621 | வே | 1996**
கரம்பொன் | இந்து | BSC
Software Engineer
ரேவதி (மீனம்)
165 செ.மீ

**17636 | வே | 1992**
புங்குடுதீவு | இந்து | BA
Trainee Solicitor
லண்டன் | மூலம் (தனுசு)
155 செ.மீ

**17681 | கோ | 1993**
இணுவில் | இந்து | BSC
SR. QA Engineer
பூரம் (சிம்மம்) | செவ்: 01
162 செ.மீ

**17711 | கோ | 1990**
வவுனியா | இந்து | BSC,
Engineer | செவ்: 08
உத்தரம் (சிம்மம்)
158 செ.மீ

**17778 | வே | 1994**
பருத்தித்துறை | இந்து | BD
Job Seeking | செவ்: 08
சித்திரை (துலாம்)
155 செ.மீ | சுவிட்சர்லாந்து

077 716 4524 | www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# 17 மேலதிக வாக்குகளினால் கல்முனை மாநகர சபையின் பட்ஜெட் வெற்றி





(எம்.எம்.அஸ்லம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகையிலுள்ள கல்முனை மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் 17 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. கல்முனை மாநகர சபையின் வரவு- செலவுத் திட்டத்திற்கான விசேட சபை அமர்வு வியாழக்கிழமை (15) பிற்பகல் 03.00 மணியளவில் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் ஆரம்பமானது. இந்த அமர்வுக்கு மாநகர சபையின் மொத்த உறுப்பினர்கள் 41 பேரில் 35 உறுப்பினர்கள் சமூகமளித்திருந்தனர்.

பட்ஜெட்டை சமர்ப்பித்து மாநகர முதல்வர் உரையாற்றியதைத் தொடர்ந்து உறுப்பினர்களின் கருத்துகளையடுத்து பட்ஜெட் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 26 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 09 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். 06 உறுப்பினர்கள் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

ஆளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 12 உறுப்பினர்களுடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் 05 உறுப்பினர்கள், சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 04 உறுப்பினர்கள், தேசிய காங்கிரஸின் ஒரு உறுப்பினர், ஹெலிகொப்டர் சுயேட்சைக் குழுவின் ஒரு உறுப்பினர், மற்றும் மான் சுயேட்சைக்குழுவின் ஒரு உறுப்பினருமாக 26 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 03 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் 03 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 03 உறுப்பினர்களும் எதிராக வாக்களித்தனர். அதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 04 உறுப்பினர்களும் சாய்ந்தமருது சுயேட்சைக் குழுவின் 02 உறுப்பினர்களும் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து உறுப்பினர்கள் பலரும் மாநகர முதல்வருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன் பட்ஜெட்டுக்கு ஆதரவாக வாக்களித்த உறுப்பினர்களுக்கு முதல்வர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலக எல்லே விளையாட்டு வீராங்கனைகளால் அன்பளிப்பு வழங்கல் !







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)
மட்டக்களப்பு

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கரடியனாறு மட்/ம மே/சுவாமி ஆத்மகணானந்தா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி.நவரூபரஞ்சினி முகுந்தன் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட 14 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இடையில் இடம்பெற்ற அரசாங்க அதிபர் வெற்றிக் கிண்ணத்தில் எல்லே போட்டியில் மாவட்ட செயலக வீராங்கனைகள் இரண்டாம் இடம் பெற்றுக் கொண்டனர்.

அவர்கள் பெற்றுக்கொண்ட பரிசுத் தொகை மற்றும் எல்லே விளையாட்டு அணி வீராங்கனைகளினால் வழங்கப்பட்ட நிதியினால் அன்பளிப்பு பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பிரதேசத்திலுள்ள முன்பள்ளி சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கினார்கள். அத்துடன் பின்தங்கிய பிரதேசத்தில் வாழும் முதியவர்கள் மற்றும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் உலர் உணவு பொருட்கள், ஆடைகள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் செங்கலடி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் எ.கருணாகரன், மட்/ம மே/சுவாமி ஆத்மகணானந்தா வித்தியாலயத்தின் அதிபர். மு.சண்முகம், மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர் என பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய உற்பத்தி திறன் போட்டியில் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு மூன்றாமிடம்




(ஹஸ்பர்)

தேசிய உற்பத்திதிறன் செயலகத்தால் அரசதிணைக்களங்களுக்கிடையே 2020ஆம் ஆண்டுக்காக நடைபெற்ற தேசிய உற்பத்தி திறன் போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் 15.12.2022 அன்று நடைபெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டது.

கொழும்பு அலரி மாளிகையில் இடம்பெற்ற விருது வழங்கல் வைபவத்தில் பிரதம அதிதியாக பிரதம அமைச்சர் தினேஸ் குணவர்தன கலந்து கொண்டார்.

இதன் போது தொழில் உறவுகள் அமைச்சர் மனுச நாணயக்காரமிடருந்து தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி இதற்கான விருதினை பெற்றுக் கொண்டார்...

இவ் விருது கிடைக்கப் பெறுவதற்கு உழைத்த பிரதேச செயலக சக உத்தியோகத்தர்களுக்கும் பிரதேச செயலாளர் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றார்.

இதில் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் அவர்களும் உடனிருந்தார்.

# சம்மாந்துறையில் சர்வதேச மனித உரிமைகள் தின விழிப்புணர்வு ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும்

( வி.ரி.சகாதேவராஜா)

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் முன்னெடுப்பின் ஊடாக சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு 'எங்களுக்கும் குரல் இருக்கின்றது' எனும் தொனிப்பொருளில் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்தில் பொதுமக்களின் ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நேற்று (16) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடலின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் துரையப்பா காத்தவராயன்( காந்தன்) தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இந்த ஊர்வலமானது சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் ஆரம்பித்து பிரதேச செயலகம் வரை நீண்டு சென்றது.

கலந்து கொண்டவர்கள் பலவித சுலோகங்களடங்கிய பதாதைகளை ஏந்திச் சென்றனர்.







எமது நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும் ,மனித உரிமைகளை பாதுகாப்பதன் ஊடாக இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும் பிரதான நோக்கமாக கொண்டு செயல்பட வேண்டும். அனைத்து மக்களும் சமமாக கருதப்பட வேண்டும். மக்களின் குடியிருப்பு விவசாய மற்றும் கலாச்சார வழிபாட்டுத் தலங்களுக்கான நிலங்கள் நியாயமான முறையில் விடுவிக்கப்பட வேண்டும் .

எதிர்கால சந்ததிகளின் உரிமையாக கருதப்படும் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் .என்பன போன்ற பல சுலோகங்கள் அடங்கிய பதாதைகள் கொண்டுவரப்பட்டன.

இதில் கிழக்கு வாழ் பொதுமக்கள் கிராம அடிப்படை அமைப்புகள் பெண்கள் அமைப்புகள் மாணவர் அமைப்பு சிவில் அமைப்புக்கள் சர்வமத அமைப்புக்கள் போன்றன இதில் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் முடிவில் நீண்ட மகஜரை சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் ஒப்படைத்தார்கள். ஊடகங்களுக்கும் மேற்படி கருத்துகளை தெரிவித்தார்கள்.

# கல்முனை ஆதார வைத்தியசாலை மட்டும் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை!



( வி.ரி.சகாதேவராஜா)

2020 ஆம் ஆண்டின் தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளுள் கல்முனை ஆதார வைத்தியசாலை, இரண்டாம் இடத்தை பெற்றுச்சாதனை படைத்துள்ளது.

குறித்த போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய நிறுவனங்களை விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (15.12.2022) வியாழக்கிழமை கொழும்பு அலரி மாளிகையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தேசிய மட்டத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் கல்முனை ஆதார வைத்தியசாலையானது அரச திணைக்களங்களுக்கான பிரிவில், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

வைத்தியசாலைகள் பிரிவில் இந்த வைத்தியசாலைக்கு மாத்திரமே இரண்டாம் இடம் கிடைக்கப்பெற்றது. இதைத்தவிர வேறு எந்த வைத்தியசாலைகளும் முதலாம், இரண்டாம் இடங்களை பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விருதை பிரதமர் தினேஸ் குணவர்தன கலந்து கொண்ட நிகழ்வில் கல்முனை ஆதார வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா முரளீஸ்வரன் தலைமையிலான குழுவினர் பெற்றுக் கொண்டனர். இதேவேளை ,

இவ் வெற்றிக்கு அனைத்து வகையிலும் வழிகாட்டிய வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி. டாக்டர் இரா.முரளீஸ்வரன் அவர்களுக்கும் பிரதி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஜெ.மதன் அவர்களுக்கும் தரமுகாமைத்துவப் பிரிவு மற்றும் சேர்ந்து பணியாற்றிய அனைத்து வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும் நன்றி கூறும் வைபவம் நேற்று (16) வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அன்னையின் ரத பவனி




(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில்அன்னை சாரதா தேவியாரின் ரத ஊர்வலம் கல்லடியில் நேற்று முன்தினம் நடைபெற்றது .

கல்லடி பேச்சியம்மன் சித்தி விநாயகர் ஆலய முன்றலில் இதற்கான தொடக்க விழா நடைபெற்றது.

கோயிலின் பிரதம குருவும் நிர்வாக அதிகாரிகளும் வந்து அன்னைக்கு ஆரத்தி செய்து தொடங்கி வைத்தார்கள்.

கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் பவனி ஆரம்பமாகியது.

வழி நெடுகிலும் மக்கள் நிறமுட்டி வைத்து ரதபவனியை வரவேற்றனர். அதைத் தொடர்ந்து பல வீதிகள் வழியாக வலம் வந்து மிஷனை அடைந்தது . ஏறக்குறைய முன்னூறுக்கும் மேற்பட்ட பக்தர்கள் ரதத்தை தொடர்ந்து பின் வந்தனர்.